# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆவணி - 11 வெள்ளி 27.08.2021 மலர் - 2, இதழ் - 143




## புதுச்சேரி பட்ஜெட்



விஜயபாரதம்


புதுச்சேரியில் பா.ஜ.க கூட்டணி அரசு பொறுப்பேற்று முதல் பட்ஜெட் நேற்று தாக்கல் செய்யப்பட்டது. அதுமட்டும் இல்லாமல், புதுச்சேரி வரலாற்றில் புதுச்சேரி ஆளுநர் உரையும் பட்ஜெட் தாக்கலும் ஒரே நாளில் வருவது இதுவே முதல் முறை. மேலும், புதுச்சேரி சட்டசபை வரலாற்றில் முதன்முறையாக ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன், தமிழில் உரையாற்றினார். திருக்குறளை மேற்கோள்காட்டி தனது உரையை துவக்கிய ஆளுனர், புதுச்சேரியில் கொரோனா தொற்றை தற்போது அரசு கட்டுப்படுத்தி உள்ளது. கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்ட முன்கள பணியாளர்களுக்கு நன்றி, பாராட்டுக்கள். கோவிட்டை முழுவதுமாக ஒழிக்க அனைவரும் தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும். புதுச்சேரியில் 2020 21ம் நிதியாண்டில் 9 ஆயிரம் கோடி ரூபாய் வருமானம் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 8,419 கோடி ரூபாய் வருமானம் கிடைத்து உள்ளது. புதுவையில், 250 காய்கறி விதைப்பைகள் ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. 11 டிராக்டர்கள், 9 பவர் டிரில்லர்கள், நெல் நடவு விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படுகிறது என தெரிவித்தார்.

## ஐ.டி.பி.பி. தலைவராக தமிழக அதிகாரி



இந்தோ திபெத் எல்லைக் காவல்படை (ஐ.டி.பி.பி) தலைவராக, சஞ்சய் அரோரா நியமிக்கப்பட்டுள்ளார். இவர், 1988ம் ஆண்டு, தமிழகத்தில் இருந்து, ஐ.பி.எஸ் அதிகாரியாக தேர்வானவர். சஞ்சய் அரோரா, இதுவரை மத்திய ரிசர்வ் போலீஸ் படை எனப்படும் சி.ஆர்.பி.எப்பில் சிறப்பு டைரக்டர் ஜெனரலாக பணியாற்றிவந்தார்.

# குழந்தைகளுக்கான இணைய பாதுகாப்பு



விஜயபாரதம்

குழந்தைகள், இணையத்தை பாதுகாப்பான முறையில் கையாள்வதற்கு ஏதுவாக ஒரு புதிய வசதியை, தமிழ் உட்பட, எட்டு மொழிகளில் வழங்க கூகுள் திட்டமிட்டுள்ளது. இத்திட்டம், பாரதத்தில் இந்த ஆண்டுக்குள் அறிமுகம் செய்யப்பட உள்ளது. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி, மராத்தி, பெங்காலி, குஜராத்தி ஆகிய எட்டு மொழிகளில் இந்த பாதுகாப்பு வழிமுறைகள் வழங்கப்பட உள்ளன. மேலும், இத்திட்டம் குழந்தைகள் இவற்றை விளையாட்டுடன் இணைந்து கற்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்காக அமர் சித்திர கதா என்ற பிரபல, 'காமிக்ஸ்' இதழுடன் இணைந்து இதனை செயல்டுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அமர் சித்திர கதா இதழ்களிலும் இன்டர்நெட் பாதுகாப்பு தொடர்பான தகவல்கள் இடம்பெறும்.

# மைசூருவில் பா.ஜ.க. மேயர்



விஜயபாரதம்

கடந்த ஆண்டு கர்நாடக மாநிலம், மைசூருவில் நடைபெற்ற மாநகராட்சித் தேர்தலில், காங்கிரஸ் மதசார்பற்ற ஜனதாதளம் கூட்டணி வெற்றி பெற்று, மைசூரு மாநகராட்சியை கைப்பற்றியது. தேர்தல் ஆணையத்தில் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் போலி சொத்து விவரம் தாக்கல் செய்ததால் ம.ஜ.தவின் ருக்மினி மாதே கவுடாவின் மேயர் பதவி பறிக்கப்பட்டது. காலியான மேயர் பதவிக்கு, மைசூரு மாநகராட்சி கவுன்சில் கூட்டத்தில் தேர்தல் நடந்தது. பா.ஜ.க சார்பில் சுனந்தா பாலநேத்ரா, காங்கிரஸ் டார்பில் சாந்தகுமார், அஸ்வினி அனந்த் ஆகியோர் மேயர் பதவிக்கு வேட்பு மனு தாக்கல் செய்தனர். இத்தேர்தலில், பா.ஜ.கவின் சுனந்தா பாலநேத்ரா வெற்றி பெற்று மைசூரின் புதிய மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டார். மைசூரு மாநகராட்சி வரலாற்றில், பா.ஜ.க அதனை கைப்பற்றுவது இது முதல் முறை.

# முன்பதிவு இல்லாத ரயில்கள்



விஜயபாரதம்

கொரோனா தொற்று பரவல் காரணமாக ரயில்களில் முன் பதிவு பயணத்திற்கு மட்டுமே அனுமதிக்கப் படுகிறது. முன்பதிவு இல்லாத ரயில்களை மீண்டும் இயக்க கோரிக்கை எழுந்ததை அடுத்து ஆகஸ்ட் 30ம் தேதி முதல், திருச்சி, காரைக்கால், மயிலாடுதுறை, திருவாரூர், மதுரை, செங்கோட்டைக்கு இடையே 5 முன்பதிவு இல்லாத ரயில்கள் இயக்கப்படும். மேலும், எர்ணாகுளம், கொல்லம், கன்னூர், மங்களூர் இடையேயான முன்பதிவு இல்லாத சிறப்பு ரயில்களும் ஆகஸ்ட் 30ம் தேதி முதல் இயக்கப்படும் என்று தென்னக ரயில்வே அறிவித்துள்ளது.

# கிரானைட் குவாரிகளுக்கு எதிர்ப்பு



விஜயபாரதம்

கரூர் மாவட்ட நிர்வாகமும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியமும் இணைந்து வெள்ளியணை பகுதியில் உள்ள தனியார் கூட்டரங்கில், கரூர் மாவட்டம் கே.பிச்சம்பட்டி பகுதியில் இரண்டு கிரானைட் குவாரிகளை அமைக்க பொதுமக்களிடம் கருத்து கேட்புக் கூட்டம் நடத்தியது. இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அப்பகுதி பொதுமக்கள், கல் குவாரி அமைக்க கூடாது என வலியுறுத்தினர். மேலும், பொதுமக்கள் கலந்து கொள்ளக்கூடாது என திட்டமிட்டே 10 கிலோமீட்டர் தள்ளி கூட்டத்தை நடத்துவது, கூட்டத்தில் கல்குவாரி உரிமையாளர்கள், அவர்களின் ஊழியர்கள், தி.மு. கவினரை வேண்டுமென்றே பங்கேற்கவைப்பது குறித்து வாக்குவாதம் செய்தனர். சம்பந்தமே இல்லாமல் தி.மு. கவினர் இதில் குறுக்கிட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதில் பங்கேற்ற மாவட்ட ஆட்சியரும் அலுவலகத்தில் வேலை உள்ளது எனக்கூறி, பாதியிலேயே சென்றுவிட்டார். கல்குவாரிக்கு எதிராக சுற்றுச்சூழல் ஆர்வலர் முகிலன் தர்ணாவில் ஈடுபட்டார். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

# கரும்பு விலை உயர்வு

சர்க்கரை ஆலைகளுக்கு வழங்கப்படும் கரும்புக்காக நிர்ணயிக்கப்படும் குறைந்தபட்ச விலையை உயர்த்த வேண்டும் என்பது விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கை. அக்கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், கரும்பின் குறைந்தபட்ச விலையை மத்திய அரசு உயர்த்தியுள்ளது. அதன்படி, 2021 2022 நிதியாண்டிற்கு 5 ரூபாய் உயர்த்தி, 1 குவின்டால் கரும்பின் குறைந்தபட்ச விலை 290 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு குவின்டால் கரும்பை உற்பத்தி செய்ய ரூ. 155 செலவாகும் எனும் நிலையில், தற்போது குறைந்தபட்ச விலை 290 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இது, உற்பத்தி செலவை விட 87.1 சதவீதம் அதிகம். எனவே, விவசாயிகளுக்கு இனி செலவைவிட 50 சதவீதம் அதிக வருமானம் கிடைக்கும். பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடந்த பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை குழு கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது. விஜயபாரதம்



# ராகுலின் புலம்பல்




விஜயபாரதம்

'தேசிய சொத்துக்களை பண மாக்குதல்' என்ற இந்த திட்டத்தில், அடுத்த நான்கு ஆண்டுகளில் 6 லட்சம் கோடி ரூபாய் திரட்டப்பட்டு, அத்தொகை மீண்டும் அடிப்படை கட்டமைப்பு துறையில் முதலீடு செய்யப்படும். இத்திட்டத்தில், ரயில்வே, மின்சாரம் உள்ளிட்ட துறைகளின் சொத்துக்களை தனியாருக்கு குத்தகைக்கு வழங்கி, குறித்த காலத்திற்குப் பின், மீண்டும் பெறும் வகையில் புதிய திட்டத்தை மத்திய நிதியமைச்சகம் அறிவித்தது. ஆனால், இத்திட்டம் குறித்த விவரம் புரியாமல் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல், மமதா பானர்ஜி உள்ளிட்டோர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்.

இதற்கு பதில் அளித்த மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், காங்கிரஸ் கூட்டணி ஆட்சியிலும் பொதுத்துறை நிறுவன சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டன. மும்பை புனே விரைவு நெடுஞ்சாலை திட்டத்தில் 8,000 கோடி ரூபாய் திரட்டப்பட்டது. அப்போது ஏன் ராகுல் எதிர்க்கவில்லை, அது என்ன அவர்களின் குடும்ப சொத்தா? ஒரே ஒரு காமன்வெல்த் விளையாட்டு மூலம் எவ்வளவு பணம் சுருட்டப்பட்டு பல பினாமி கணக்குகளில் போடப்பட்டது? இத்திட்டம் பற்றி எதுவுமே தெரியாமல் ராகுல் பேசுகிறார். மமதாவும் எதிர்க்கிறார். என அவர்களுக்கு சரியான பதிலடி கொடுத்தார்.

ஆனால், அதன் பிறகும் அத்திட்டத்தை குறித்து சரியாக புரிந்துகொண்டு பிறகு அறிவுபூர்வமாக அதனை எதிர்கொள்ளமுடியாத ராகுல், கொரோனா தடுப்பில் அரசின் கவனம் இல்லை, சொத்துகளை விற்பதில்தான் அரசு தீவிரம் காட்டுகிறது என புலம்பி வருகிறார்.

# ஆர்.டி.ஐயில் அதிகாரி கையெழுத்து




விஜயபாரதம்

தகவல் உரிமை சட்டம் (ஆர்.டி.ஐ) குறித்த ஒரு வழக்கில், சென்னை உயர் நீதிமன்றம், 'தகவல் ஆணையம் அளிக்கும் தகவல்களில், ஏதேனும் குறைகள் இருந்தால் அதை எதிர்த்து மேல் முறையீட்டு அதிகாரியிடம் முறையீடு செய்ய தகவல் அறியும் உரிமை சட்டம் மக்களுக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. தவறான தகவல் அளிக்கும் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஏதுவாக பதில்களின் ஒவ்வொரு பக்கத்திலும் சம்பந்தப்பட்ட அதிகாரியின் கையெழுத்துடன் அவரது ஆதார் விபரங்களையும் வழங்க வேண்டும். தகவல் ஆணையம், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சுற்றறிக்கை அனுப்ப வேண்டும்' என உத்தரவிட்டுள்ளது.

# மாப்ளா வன்முறையாளர்கள் நீக்கம்



விஜயபாரதம்

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் விவரிப்பில் ஒரு மிகப்பெரிய தவறைத் திருத்தும் மிகவும் அவசியமான ஒரு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, அரசால் நியமிக்கப்பட்ட குழு ஆய்வு செய்து, இந்திய சுதந்திரப் போராட்ட தியாகிகள் அகராதியிலிருந்து 387 மாப்ளா வன்முறையாளர்களின் பெயர்களை நீக்க அரசிடம் பரிந்துரைத்துள்ளது. அப்பரிந்துரையில், 387 பேரும் ஹிந்துக்களுக்கு எதிராக கலவரம் செய்தவர்கள். மலபாரில் 1921ல் நடைபெற்ற மாப்ளா கலவரம் சுதந்திரப் போராட்டம் அல்ல. அது மதமாற்றத்தை மையமாகக் கொண்ட ஒரு அடிப்படைவாத இயக்கம். அக்கலவரக்காரர்களால் எழுப்பப்பட்ட கோஷங்கள் எதுவும் தேசியவாதத்திற்கு ஆதரவாக இல்லை. அது கலிபாவை நிறுவும் முயற்சி மட்டுமே. அது வெற்றி பெற்றிருந்தால், இந்தியா அப்பகுதியை இழந்திருக்கும்' என குறிப்பிடப்பட்டுள்ளது. இது குறித்து கருத்துத் தெரிவித்த விஷ்வ ஹிந்து பரிஷத் (விஎச்பி) அமைப்பு, இந்த நீக்கம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என தெரிவித்ததுடன் இந்த துணிச்சலான நடவடிக்கைக்கு மத்திய அரசை வாழ்த்தியது.

# மமதாவுக்கு நீதிமன்றம் குட்டு




விஜயபாரதம்

இஸ்ரேலிய நிறுவனம் என்.எஸ்.ஓ'வின் பெகாசஸ் உளவு மென்பொருள் தொடர்பான வழக்கின் மனுக்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி ரமணா, நீதிபதி சூர்யா காந்த் அடங்கிய அமர்வு விசாரித்து வருகிறது. ஆனால், இதில் மத்திய அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்தும் நோக்கில் முந்திரிகொட்டையாக முந்திக்கொண்டு மேற்குவங்க முதல்வர் மமதா பானர்ஜி தலைமையிலான மேற்கு வங்க அரசு, கடந்த ஜூலை 26ல் ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி மதன் பி. லோகூர், கொல்கத்தா உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ஜோதிர்மய பட்டாச்சார்யா ஆகியோர் அடங்கிய விசாரணைக் குழுவை அமைத்தது.

இதனையடுத்து உச்ச நீதிமன்ற நீதிபதிகள், இவ்விவகாரத்தை நாங்கள்தான் விசாரித்து வருகிறோமே, அதற்குள் நீங்கள் ஏன் அவசர அவசரமாக விசாரணை குழுவை அமைத்தீர்கள்? என கேள்வி எழுப்பினர். மேலும், இதில் கட்டுப்பாட்டையும் பொறுமையையும் மமதாவின் அரசு காக்க வேண்டும். தன்னிச்சையாக நீங்கள் நடந்தால் இவ்விவகாரத்தில் நங்கள் உத்தரவு பிறப்பிக்க நேரிடும் என கண்டித்தனர். இதனையடுத்து இவ்வழக்கில் மேற்குவங்க அரசு சார்பில் ஆஜரான காங்கிரஸ் கட்சியை சேர்ந்த வழக்கறிஞர் அபிஷேக் மனு சிங்வி, விசாரணையை நாங்கள் உடனே நிறுத்துகிறோம், இப்போதைக்கு நாங்கள் தொடரமாட்டோம் என்று உறுதியளித்தார்.



விஜயபாரதம்

# உச்ச நீதிமன்றம் புதிய நீதிபதிகள்

உச்சநீதிமன்றத்தில் மொத்த நீதிபதி பணியிடங்கள் 34. அதில், அண்மையில் 2 நீதிபதிகள் ஓய்வு பெற்றனர். தற்போது பணியில் இருக்கும் நீதிபதிகளின் எண்ணிக்கை 24. இதையடுத்து, நீதிபதி காலி பணியிடங்களை நிரப்ப, தலைமை நீதிபதி என்வி ரமணா தலைமையிலான கொலீஜியம் அமைப்பு, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி எம்.எம். சுந்தரேஷ், கர்நாடக உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அபை ஸ்ரீநிவாஸ் ஒகா, உட்பட 9 பேரின் பெயர்களை மத்திய அரசுக்கு பரிந்துரைத்தது. இதில் 3 பெண் நீதிபதிகளும் அடங்குவர். உச்சநீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத்திலிருந்து நேரடி நியமன அடிப்படையில், அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் பி.எஸ். நரசிம்மாவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கொலிஜியத்தின் இப்பரிந்துரைக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இவர்கள் விரைவில் பதவிற்பார்கள் என தெரிகிறது.

# ரேடியோ ஜாக்கிக்கு மிரட்டல்



விஜயபாரதம்

காஷ்மீரின் சோபோர், பாரமுல்லா, வடக்கு காஷ்மீர் உள்ளிட்ட பகுதிகளில் ராணுவத்திற்கும் காஷ்மீர் மக்களுக்குமான இடைவெளியைக் குறைக்கும் பொருட்டு பாரத ராணுவம் தனது முதல் சமூக வானொலி நிலையமான 'ரேடியோ சினார்' ஆரம்பித்தது. இதில், ரேடியோ ஜாக்கியாக பாரமுல்லா பகுதியை சேர்ந்த சமணியா பட் என்ற இளம்பெண் தேர்வாகி வேலையைத் தொடங்கினார். அவர் ஸ்டுடியோவில் வேலை செய்யும் படம் சமூக வலைத்தளத்தில் வெளியானது. இதனையடுத்து அவர் தலையில் முஸ்லிம் பெண்களை போல முக்காடு அணிய வேண்டும், முஸ்லிம் பெண்களின் உடையை அணிய வேண்டும் என அவருக்கு அங்குள்ள முஸ்லிம் அடிப்படைவாதிகள் மிரட்டல் விடுக்கத் துவங்கியுள்ளனர்.

# கல்யாண் சிங்கிற்கு மரியாதை



விஜயபாரதம்

உத்தரபிரதேச முன்னாள் முதல்வர் கல்யாண் சிங் ஆகஸ்ட் 21ல் காலமானார். சிறந்த ராமபக்தரான அவர், அயோத்தி ராமர் ஆலயத்திற்காக தனது முதல்வர் பதவியை தியாகம் செய்தார். 1992 டிசம்பரில் அயோத்தியில் கர சேவகர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த காவல்துறையை அனுமதிக்கவில்லை. இந்நிலையில், அவரை கௌரவிக்கும் வகையில், தற்போது, உத்தர பிரதேசம் புலந்தசாஹரில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் லக்னோவில் உள்ள சூப்பர் ஸ்பெஷாலிட்டி புற்றுநோய் மருத்துவமனைக்கு ராமபக்தர் கல்யாண் சிங்கின் பெயர் சூட்டப்படும் என உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் அறிவித்துள்ளார். மேலும், அயோத்தியில் ராம ஜென்மபூமிக்கு செல்லும் சாலைக்கும் லக்னோ, பிரயாக்ராஜ், புலந்த்ஷஹர், அலிகார் ஆகிய இடங்களில் தலா ஒரு சாலைக்கும் முன்னாள் உபி முதல்வர் கல்யாண் சிங்கின் பெயரிடப்படும் என கூறியுள்ளார்.

# எம்.எல்.ஏவுக்கு கொலை மிரட்டல்



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தானில் அந்நாட்டு மக்களை தலிபான்கள் கொடுமைப்படுத்தி வருகின்றனர் என தனது முகநூலில் ஒரு பதிவை போட்டார் கேரள முன்னாள் அமைச்சரும் முஸ்லிம் லீக் கட்சியின் மூத்த சட்டமன்ற உறுப்பினருமான எம்.கே முனீர். இதனையடுத்து, அவரது பதிவை 24 மணி நேரத்தில் நீக்க வேண்டும். இல்லையெனில், அவரும் அவரது குடும்பத்தினரும் கொலை செய்யப்படுவார்கள் என ஒரு மிரட்டல் கடிதம் அவருக்கு வந்துள்ளது. அக்கடிதத்தில் 'தலிபான் ஒரு வியப்பு' என குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக அவர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

# களமிறங்கிய சி.பி.ஐ

கொல்கத்தா உயர்நீதிமன்றம் சி.பி.ஐக்கு மேற்கு வங்க மாநிலத்தில் நடந்த தேர்தலுக்குப் பிறகு நடந்த கொலை, கொள்ளை, கற்பழிப்பு, வன்முறை சம்பவங்கள் உள்ளிட்ட வழக்குகளை விசாரிக்க உத்தரவிட்டதைத் தொடர்ந்து, இந்த வழக்கை விசாரிக்க முன் எப்போதும் இல்லாத வகையில், 109 அதிகாரிகள் கொண்ட ஒரு பெரிய குழு மேற்குவங்க மாநிலத்தில் விசாரணையில் களமிறங்கியுள்ளது. இதற்காக மாநிலத்தை நான்கு மண்டலங்களாகப் பிரித்து நான்கு தனித்தனி பிரிவுகள் நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் தலா ஒரு கூடுதல் இயக்குனர் தலைமையில் நாடு முழுவதிலும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில டி.ஐ.ஜிக்கள், 16 காவல்துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் புலனாய்வு அதிகாரிகள் உள்ளிட்டோர் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை காவல்துறையினர் அளித்த விவரங்கள் போதுமானதாக இல்லாததால் முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்க மேற்கு வங்க காவல்துறை தலைவர் பணிக்கப்பட்டுள்ளார். தேசிய மனித உரிமைகள் ஆணையம் (என்.ஹெச்.ஆர்.சி) அறிக்கையிள் உள்ள அனைத்து வழக்குகளையும் இக்குழு ஆராயும்.

கொல்கத்தா உயர்நீதிமன்றம், சி.பி.ஐ விசாரணையுடன், மேற்கு வங்க மாநில காவல்துறை அதிகாரிகளை கொண்ட சிறப்பு விசாரணை குழு (எஸ்.ஐ.டி) ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அக்குழு இதில் சம்பந்தப்பட்ட மற்ற வழக்குகளை விசாரிக்க வேண்டும். இவ்விரு அமைப்புகளின் விசாரணைகளும் நீதிமன்றத்தின் நேரடி கண்காணிப்பில் இருக்கும். விசாரணை அறிக்கை ஆறு வாரங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என கூறியுள்ளது.

விஜயபாரதம்



# முதல்வரை விசாரிக்க வேண்டும்



விஜயபாரதம்

பாரதம் சுதந்திரம் அடைந்த ஆண்டுகூட தெரியாத மகாராஷ்டிர முதல்வர் உத்தவ் தாக்கரே குறித்து ஒரு நிகழ்ச்சியில் பேசிய மத்திய அமைச்சர் நாராயண் ரானே, அங்கிருந்திருந்தால் நான் அவரை அறைந்திருப்பேன் என கூறினார். இதற்காக, சட்ட விதிகளை மீறி அவதூறு வழக்கில் அவரை கைது செய்தது மகாராஷ்டிர அரசு. சில மணி நேரத்தில் அவர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். இந்நிலையில், உத்தவ் தாக்கரே ஒருமுறை உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் குறித்து அவதூறாக 'அவர் யோகி அல்ல, போகி என்றும் முதல்வர் யோகி ஆதித்யநாத்தை செருப்பால் அடிக்க வேண்டும் என்றும் கூறினார். எனவே உத்தவ் தாக்கரே மீதும் சிவசேனாவின் அதிகாரபூர்வ பத்திரிகையான 'சாம்னா' மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மகாராஷ்டிர பா.ஜ.க சட்டமன்ற உறுப்பினர் தேவயானி ஃபாரண்டே கோரியுள்ளார். இது குறித்து காவல்துறை கமிஷனர் அலுவலகத்திலும் புகார் அளித்துள்ளார்.

# உண்மையை ஒப்புக்கொண்ட தலிபான்கள்



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தானை அராஜக வழியில் கைப்பற்றிய தலிபான்கள், ஆப்கனில் உள்ள பெண்களை பத்திரமாக தங்கள் வீட்டிலேயே இருக்குமாறு கூறியுள்ளனர். தலிபான் போராளிகளுக்கு பெண்களை எப்படி நடத்த வேண்டும் என்ற அடிப்படை குறித்துத் தெரியாததும், அதற்கான பயிற்சிகள் அவர்களுக்கு அளிக்கப்படாததும்தான் இதற்கு காரணம். இதனாலேயே ஆங்காங்கு பெண்கள் மீது பல அத்துமீறல்கள் தொடர்ந்து நடக்கின்றன என கூறியுள்ளனர். பெண்களின் சுதந்திரத்தை மதிக்கப் போவதாக உறுதியளித்த ஒரே வாரத்தில் தங்கள் ஆட்சியில் பெண்கள் தங்கள் வீரர்களிடமிருந்தே பாதுகாப்பாக இல்லை என்பதை தலிபான்கள் ஒப்புக்கொண்டுள்ளது சிந்திக்கத்தக்கது.


விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க
www.vijayabharatham.org
என்ற இணையதளம் அல்லது
044 - 26420870 என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

93613 99006

# உயிர்த்தெழுதல் விபரீதம்



விஜயபாரதம்

மக்களை மதமாற்றம் செய்யும் முயற்சியில், ஏழைகளுக்கு பணம், பொருள் கொடுத்து மதம் மாற்றுவது மட்டுமில்லாமல், சி.டி கொடுத்து நோயை நீக்குவது, பேய் ஓட்டும் சடங்கு, ஆன்லைன் வழியாகவே பேய் ஓட்டுவது என புதிய புதிய நாடகங்களை கிறிஸ்தவ பாதிரிகள் தினம்தோறும் அரங்கேற்றுகின்றனர். அவ்வகையில் சாம்பியா நாட்டில் உள்ள சியோன் தேவாலயத்தின் போதகர் ஜேம்ஸ் சகாரா, ஏசு கிறிஸ்துவைப் போலவே தாமும் மூன்று நாட்களில் உயிர்த்தெழுப்ப முடியும் என்று மக்களிடம் கூறி தன்னை உயிருடன் புதைக்கச் சொன்னார். அதன்படி, மூன்று உதவியாளர்கள் அவரது கைகளைக் கட்டி உயிருடன் மண்ணில் புதைத்தனர். மூன்று நாட்களுக்குப் பிறகு, உதவியாளர்களும் மக்களும் மீண்டும் அவரை தோண்டி எடுத்தபோது பாஸ்டரின் உயிரற்ற உடல்தான் அவர்களுக்குக் கிடைத்தது. ஆயினும், அவரைப் பின்பற்றுபவர்கள் அவரை உயிர்ப்பிக்க பல முயற்சிகள் மேற்கொண்டனர். ஆனால், கடைசிவரை எந்த அதிசயமும் நடக்கவில்லை. இதையடுத்து பாஸ்டரை புதைக்க உதவிய மூன்று தேவாலய உறுப்பினர்களில் ஒருவர் மட்டும் காவல் நிலையத்தில் சரணடைந்தார்.

# அமெரிக்காவிலும் நாம்தான்



விஜயபாரதம்

அமெரிக்காவில் சமீபத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு புள்ளிவிவரங்கள் மூலம் சில சுவாரசியமான தகவல்கள் வெளியாகியுள்ளன. அதன்படி, அமெரிக்காவில் தற்போது சுமார் 40 லட்சம் இந்தியர்கள் வாழ்கிறார்கள். இவர்களில் 16 லட்சம் பேர் விசா பெற்றுள்ளனர். 14 லட்சம் பேர் இயற்கையான குடியிருப்பாளர்கள். 10 லட்சம் பேர் அமெரிக்காவில் பிறந்தவர்கள். அமெரிக்க வாழ் இந்திய நடுத்தர குடும்பங்கள் ஆண்டுக்கு 1 லட்சத்து 23 ஆயிரத்து 700 டாலர் (சுமார் ரூ. 93 லட்சம்) சம்பாதிக்கின்றனர். இது அமெரிக்காவின் தேசிய சராசரி வருமானத்தை விட இரு மடங்கு ஆகும். இன்னொரு சிறப்பம்சமாக, கல்லூரி படிப்பை பொறுத்தவரை, அமெரிக்க தேசிய சராசரி 34 சதவீதம்தான். கல்லூரி படிப்பை முடித்தவர்கள். ஆனால், அமெரிக்க வாழ் இந்தியர்களில் 79 சதவீதத்தினர் கல்லூரி பட்டதாரிகள். ஆசிய நாடுகளிலேயே இந்தியர்களின் வருமானம்தான் அதிகம். அடுத்ததாக தைவான் நாட்டினர் 97 ஆயிரத்து 129 டாலரும், பிலிப்பைன்ஸ் நாட்டினர் 95 ஆயிரம் டாலரும் சம்பாதிக்கின்றனர்.

# ஐந்தாம் தமிழ்ச் சங்கம் எம்.எம்.தண்டபாணி தேசிகர்



விஜயபாரதம்

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் அருகே உள்ள திருச்செங்காட்டங்குடியில் 1908ல் பிறந்தார். சிவத்தொண்டு புரிந்து வரும் ஓதுவார் குடும்பத்தைச் சேர்ந்தவர். கோயில்களில் தந்தை பாடும்போது உடன் இருந்த இவருக்கும் இசை மீது ஆர்வம் ஏற்பட்டது. சடையப்ப பிள்ளை, மாணிக்க தேசிகர் ஊளிட்டோரிடம் இசைப்பயிற்சி பெற்றார்.

சங்கீத அரங்கேற்றம் திருமருகல் ராமர் கோயிலில் நடைபெற்றது. தனது 18வது வயதில் மதுரையில் நடந்து வந்த தேவாரப் பாடசாலையின் ஆசிரியராகப் பொறுப்பேற்றார். இசை என்பது ஒரு சிலர் பாடி, கேட்டு ரசிக்கும்படியாக மட்டும் இருக்கக் கூடாது, சாதாரண மக்களும் இசையைக் கேட்டு புரிந்து ரசிக்க வேண்டும் என்று கருதியவர் தேசிகர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் இசைத்துறைத் தலைவராக பதினைந்து ஆண்டுகள் பணியாற்றினார். அப்போது ‘தமிழ்ப் பாமாலை’ என்ற நூலை வெளியிட்டார். திருக்குறளுக்கு முதன்முதலாக இசை அமைத்து, அதை இறைவணக்கமாகப் மேடையில் பாடியவர் என்ற பெருமை பெற்றார். கர்நாடக இசையில் அமைந்த பல கீர்த்தனைகளையும் இவர் புனைந்துள்ளார். 1935ல் இவரது பாடும் திறனால் கவரப்பட்ட வேல் பிக்சர்ஸ் அதிபர்கள் இவரைப் ‘பட்டினத்தார்’ படத்தில் நடிக்க வைத்தனர். இதில் பெரும்பாலான பாடல்களை இவரே பாடினார்.

நந்தனார், வள்ளாள மகாராஜா, தாயுமானவர், மாணிக்கவாசகர், திருமழிசை ஆழ்வார் உள்ளிட்டப் பல திரைப்படங்களில் பாடி நடித்துள்ளார். தனது வெண்கலக் குரலில் திரைப்படங்களில் இவர் பாடிய ஜகஜனனீ, என் அப்பன் அல்லவா, வழிமறித்து நிற்குதே, காண வேண்டாமா,... உள்ளிட்ட பாடல்கள் ரசிகர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தன.

சங்கீத சாகித்திய சிரோமணி, சங்கீத கலாசிகாமணி, இசைப்பேரறிஞர், சங்கீத நாடக அகாடமி, ஐந்தாம் தமிழ்ச் சங்கம் விருது உள்ளிட்ட பல பட்டங்கள், விருதுகள் பெற்றுள்ளார். தேவாரப் பாடல்களையும் திருமுறைகளையும் பாடி இசைத் தட்டுகளாக வெளியிட்டார். இசையின் பல்வேறு நுணுக்கங்களை ஆழ்ந்து ஆராய்ந்து இடைக்கால இசை, இயலும் இசையும், இசையும் நாடகமும் உள்ளிட்ட பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். ‘ஐந்தாம் தமிழ்ச் சங்கம்’ என்றெல்லாம் புகழப்பட்டவரும் தமிழகத்தின் தலைசிறந்த சங்கீத வித்வான்களில் ஒருவருமான எம்.எம்.தண்டபாணி தேசிகர் 1972ம் ஆண்டு, ஜூன் மாதம், 64வது வயதில் மறைந்தார்.

# நாதஸ்வர சக்கரவர்த்தி டி.என். ராஜரத்தினம் பிள்ளை



விஜயபாரதம்

திருமருகல் என்ற ஊரில் பிறந்து திருவாவடுதுறைக்கு இடம்பெயர்ந்து வளர்ந்தவர் டி.என் ராஜரத்தினம் பிள்ளை. சின்னப் பையனாக இருந்தபோதே, கச்சேரிகளில் வாய்ப்பாட்டு பாட வாய்ப்புக் கிடைத்தது. ஆனாலும் திருவாவடுதுறை மடத்தின் ஆஸ்தான நாகஸ்வர வித்வான் நடேசப் பிள்ளையின் தொடர்பு கிடைத்தவுடன் தனது ஜீவன் நாதஸ்வரத்தில்தான் இருக்கிறது என்று கண்டுகொண்டார்.

ஒரு கச்சேரிக்கு, தான் வரும்போது எழுந்து நிற்காத ஜில்லா கலெக்டரிடம் ராஜரத்தினம் சொன்னாராம். ''ஏம்ப்பா... நான் இந்தக் கச்சேரிக்கு மட்டும் மூவாயிரம் ரூபாய் வாங்கியிருக்கேன். உன் மாசச் சம்பளமே ஆயிரத்தைத் தாண்டாது. நீ பெரியவனா, நான் பெரியவனா?'' என கேட்டவர் அவர்.

ஒரு சமயம், மைசூர் மகாராஜாவையே ஒரு பிடி பிடித்துவிட்டார். கச்சேரி முடிந்ததும் கைதட்டிப் பாராட்டிய மகாராஜா, ''கணக்குப்பிள்ளை, பணத்தை எடுத்துவந்து பிள்ளைக்குக் கொடு'' என்றாராம். உடனே பிள்ளை, பக்கவாத்தியம் வாசித்தவரைக் கூப்பிட்டு, ''மேளக்காரரே... பணத்தை வாங்கும்'' என்று சொல்லிவிட்டு, மகாராஜாவிடம், ''நீங்கள் மாநிலத்துக்கு ராஜா என்றால் நான் இசைக்குச் சக்கரவர்த்தி'' என்று சொல்லியிருக்கிறார். அப்புறமென்ன மகாராஜா தன் கையாலேயே பிள்ளைக்குச் சன்மானம் செய்தார்.

அக்காலத்தில் 'திமிரி' எனும் அளவில் சிறிய நாதஸ்வரம் புழக்கத்தில் இருந்தது. வாசித்தால் ஆறு மைல் தூரத்துக்கு அப்பாலும் கேட்கும். அதில் நளினம் சேர்த்து அதை ராஜ வாத்தியமாக்க விரும்பினார் ராஜரத்தினம் பிள்ளை. ரங்கநாத ஆச்சாரியுடன் சேர்ந்து விதவிதமான சோதனைகள் செய்து அதனை 'பாரி' என்கிற அளவில் பெரிய இனிய சத்தம் எழுப்பும் நாதஸ்வரத்தை வடிவமைத்தார்.

'பண்டார சந்நிதி (மடத்துத் தலைவர்) வீதி உலா வரும்போது அதைத் தடுக்க வேண்டும்' என்று தி.கவினர் திட்டம் போட்டார்கள். ''நீங்க வீதி உலா போங்க... நான் பாத்துக்கிறேன்'' என்றார் பிள்ளை. தி.கவினர் நின்றிருந்த இடத்தை ஊர்வலம் நெருங்கும்போது, எங்கிருந்தோ வந்த ராஜரத்தினம் பிள்ளை தடாலென பண்டார சந்நிதி பல்லக்கின் முன்பு விழுந்து கும்பிட்டார். ''ராஜரத்தினம் பிள்ளையே வந்து கால்ல விழறாரு. இந்தப் பண்டார சந்நிதி உண்மையிலேயே மகான்தான் போலிருக்குது'' என்று போராட்டக்காரர்கள் கலைந்து சென்றுவிட்டனர்.

# சர் தோரப்ஜி டாடா



விஜயபாரதம்

ஆகஸ்ட் 27, 1859 இல் பிறந்த சர் தோரப்ஜி டாடா. இவர் டாடா குழும நிறுவனர் ஜாம்செட்ஜி டாடாவின் முதல் வாரிசு. சர் தோரப்ஜி டாடா தனது தந்தையின் வணிக புத்திசாலித்தனத்தை மட்டுமல்ல, தன்னலமற்ற எண்ணம், சமூகத்திற்கு திருப்பித் தரும் மனப்பான்மையையும் பெற்றிருந்தார்.

1897ல் தோராப்ஜி டாடா புகழ்பெற்ற அறிவியலாளர் ஹோமி ஜஹாங்கீர் பாபாவின் மகள் மெஹர்பாயை மணந்தார். அவர் மனைவியும் சமூகப்பணி, பெண்கள் உயர்கல்வி, பர்தா உடை, தீண்டாமை போன்றவற்றிற்கு எதிராகப் போராடினார். சர்வதேச மகளிர் கவுன்சிலில் பாரதம் இடம்பெற காரணமாக இருந்தார்.

மே 27, 1909ல் தோரப்ஜி டாடா பெங்களூருவில் இந்திய அறிவியல் நிறுவனத்தை நிறுவினார். அதற்கு பெருமளவு நன்கொடையும் அளித்தார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருத படிப்புக்கான ஒரு நாற்காலியை உருவாக்க பெருமளவு நன்கொடை அளித்தார்.


சர் தோரப்ஜி டாடாவின் விளையாட்டு மீதான ஆர்வம் அவரது பரோபகார நடவடிக்கைகளில் பிரதிபலிக்கிறது. 1919ல் நான்கு விளையாட்டு வீரர்கள், இரண்டு மல்யுத்த வீரர்களை ஆன்ட்வெர்ப் விளையாட்டுகளில் பங்கேற்க வசதி செய்து கொடுத்தார். இந்திய ஒலிம்பிக் கவுன்சிலின் தலைவராக இருந்த அவர், 1924 பாரிஸ் ஒலிம்பியாட்டில் பங்கேற்கும் இந்திய குழுவுக்கு நிதியுதவி அளித்தார்.

1932ல் நிறுவப்பட்ட டாடா அறக்கட்டளைக்கு நிதியுதவியாக டாடா சன்ஸ், இந்தியன் ஹோட்டல்கள், அதனுடன் தொடர்புடைய நிறுவனங்கள், நிலங்கள், மனைவியின் பிரபல ஜூபிலி வைரம் உள்ளிட்ட 21 நகைகள் என தனது முழு செல்வத்தையும் வழங்கினார். அவரது நன்கொடையின் மதிப்பு அக்காலத்திலேயே ரூ. 10 மில்லியனுக்கும் அதிகம்.

அவர் தனது கலை சேகரிப்பான ஓவியங்கள், சிலை, பிற கலைப் பொருட்களை மும்பையில் உள்ள பிரின்ஸ் ஆஃப் வேல்ஸ் அருங்காட்சியகத்திற்கு நன்கொடையாக வழங்கினார்.

கற்றல், ஆராய்ச்சி, நிவாரணப் பணிகள், பிற தொண்டு நோக்கங்களுக்காக, இடம், தேசியம், மதம் என எந்த வேறுபாடுகளும் இல்லாமல் நிதியுதவி வழங்கிய வள்ளல் சர் தோரப்ஜி டாடா

# உலகக் கொசு தினம்



விஜயபாரதம்

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் 20ம் தேதி எல்லா நாடுகளிலும் உலகக் கொசு தினம் அனுசரிக்கப்படுகிறது. 1897ல் டாக்டர் ரொனால்டு ராஸ் செய்த முக்கியமான கண்டுபிடிப்பைக் குறிக்கவே இது கொண்டாடப்படுகிறது. பெண்ணின அனபெலஸ் குலிசிஃபேசிஸ் கொசுக்கள்தான், மனிதர்களுக்கு மலேரியா ஒட்டுண்ணிகளைப் பரப்புகின்றன என்பதை அவர் கண்டுபிடித்தார்.

உலகில் மிக ஆபத்தான விலங்குகளில் கொசுவும் ஒன்று என்றால் நம்ப முடிகிறதா? ஆம், நோய்களை எடுத்துச் சென்று மனிதர்களுக்கு இடையில் பரப்பும் கொசுக்களால் ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கான மரணங்கள் நிகழ்கின்றன. இதில், பலவகையான நோய்களைப் பரப்பும் பல்வேறு கொசுக்கள் உள்ளன.

உதாரணமாக, ஏடிஸ் ஈஜிப்தி வகை கொசு சிக்கன்குனியா, டெங்கு, யானைக்கால் நோய், பிளவு பள்ளத்தாக்குக் காய்ச்சல், மஞ்சள் காய்ச்சல், சிக்கா போன்ற நோய்களை மக்களிடம் கொண்டு சேர்க்கிறது என்றால், அனபெலெஸ் வகை கொசுவோ மலேரியா, யானைக்கால் நோய் (ஆப்பிரிக்காவில்) பரப்புகிறது. கியூலெக்ஸ் வகை கொசு ஜப்பானிய மூளைக் காய்ச்சல், யானைக்கால் நோய், மேற்கு நைல் காய்ச்சல் உள்ளிட்டவற்றை ஏற்படுத்துகிறது.

மலேரியாவும் டெங்கு உள்ளிட்ட காய்ச்சல்களும் கொசுக்களாலேயே ஏற்படுகின்றன. ஆனால், மலேரியாவை பரப்பும் அனபெலஸ் வகை கொசு இரவில் கடிக்கும். டெங்கு உள்ளிட்ட நோய்களை பரப்பும் ஏடிஸ் வகை கொசு பட்டப்பகலில் நாம் விழித்திருக்கும்போதே கடிக்கும் என்பதுதான் இவற்றிற்கிடையே உள்ள வேறுபாடு. கொசு வலைகள், கொசுவர்த்திகள் போன்றவை இரவில் நம்மை கொசுக்கடியிலிருந்து பாதுகாக்கும். ஆனால், டெங்கு?

இந்தவகை கொசுக்களிடமிருந்து தப்பிக்கவும், தவிர்க்கவும் சில வழிகள் உண்டு. முழுக்கை சட்டை அணிவது, கொசு கடிக்காமல் இருக்க தேங்காய் எண்ணை, அதற்காக மருந்து கடைகளில் விற்கும் களிம்புகளை தடவிக்கொள்வது போன்றவை இதனை ஓரளவு தடுக்கும் என்றாலும், கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்களைக் கண்டறிந்து அழிப்பது ஒன்றே இதற்கு நல்ல தீர்வாக அமையும். வீட்டைச் சுற்றித் தேங்கியிருக்கும் தண்ணீரை அகற்றுவது, வாளிகள், டயர்கள் போன்றவற்றில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்வது போன்றவை கொசு உற்பத்தியைப் பெருமளவு தடுக்க உதவும்.

பெண் கொசுக்களுக்கே இரத்தம் தேவைப்படுகிறது. ஆண் கொசுக்கள் பூந்தேன் அல்லது பொருத்தமான சர்க்கரை ஆதாரங்களால் உயிர் வாழ்கின்றன என்பது கூடுதல் தகவல்.

# வரலட்சுமி விரதம்



விஜயபாரதம்

அம்பாளைக் கொண்டாடக் கூடிய மாதம் ஆடி மாதம். மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன் என்று மகாவிஷ்ணு அருளினார். அதேபோல், 'மாதங்களில் நான் ஆடி' என்கிறாள் மகாசக்தி. அப்பேர்ப்பட்ட ஆடி மாதத்தில் வரும் மிக முக்கியமான பண்டிகை வரலட்சுமி விரதம்.

பெண்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்திருக்கும் ஹிந்து தர்மத்தில், சுமங்கலிப் பெண்கள் சேர்ந்து செய்யும் விசேஷ பூஜைகளில் ஒன்றுதான் வரலட்சுமி விரதம். நம்முடைய ஹிந்து தர்மத்தின் ஆணிவேர்களாகத் திகழ்பவர்கள் பெண்கள். ஒரு வீட்டில் நடைபெறும் நல்ல காரியங்களுக்கு நாள் குறிக்க வேண்டும் என்றால், கிரகலட்சுமியாக இருக்கும் அந்த வீட்டுப் பெண்ணின் நட்சத்திரத்தை வைத்துத்தான் நாள் குறிக்க வேண்டும்.

வேண்டும் வரத்தை அருள்பவள் வரலட்சுமி. அஷ்டலட்சுமிகளின் ஐக்கிய ஸ்வரூபமே வரலட்சுமியின் திருவடிவம். வரலட்சுமியை விரதமிருந்து பூஜித்தால், குடும்பம் குறைவின்றி சிறக்கும். கணவர் நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் பெறுவார். குழந்தைகளுக்கு அனைத்து பேறுகளும் சித்திக்கும். நித்திய சுமங்கலியான மகாலட்சுமி பொறுமையே வடிவானவள், கணவரின் இதயத்தில் குடியிருக்கும் இவள், பெண்களை துன்பங்களில் இருந்து காப்பவள். அவ்வாறு பெண்களை காப்பதற்காகவே, இந்த வரலட்சுமி விரதத்தன்று தன்னை வழிபடும் பெண்களின் வீட்டிற்கு சென்று குடிகொள்கிறாள்.

முற்காலத்தில் மகத நாட்டின் குந்தினா என்ற கிராமத்தில் வசித்த சாருமதி என்ற பெண்ணின் கனவில் மகாலட்சுமி தோன்றி, வரலட்சுமி விரதத்தை அனுஷ்டிக்கும்படியும், அதன் பலனாக வேண்டிய அனைத்தையும் அருள்வதாகவும் கூறினாள். சாருமதியும் அந்தக் கனவைப் பற்றித் தன் கணவரிடமும், புகுந்த வீட்டினரிடமும் தெரிவித்தாள். அவர்களின் ஒத்துழைப்போடு கிராமத்தில் இருந்த மேலும் சில சுமங்கலிப் பெண்களும் வரலட்சுமி விரதத்தை அனுஷ்டித்தனர். அதனால் தாங்கள் வேண்டிய வரங்கள் அனைத்தையும் பெற்றனர் என்று வரலட்சுமி விரத மகாத்மியம் கூறுகிறது.

இந்த விரதத்தை ஆண்டுதோறும் கடைப்பிடித்துவந்தால் மனதில் எப்போதும் ஆனந்தம் நிலைத்திருக்கும். குறைவற்ற செல்வம், புத்திரபாக்கியம், ஆரோக்கியம், நினைத்தது நிறைவேறுதல் என அவரவர்க்கு ஏற்ப வரலட்சுமி வரமாக அருள்வாள். ஸ்ரீசூக்தம், மகாலட்சுமி அஷ்டகம் கனகதாரா ஸ்தோத்திரம் என்று நமக்குத் தெரிந்த ஸ்லோகங் களைப் பாராயணம் செய்யலாம்.